முற்பகல் 10–05

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) (i) இராமநாதபுரம் இளைய மன்னர் இராஜா திரு. நாகேந்திர குமரன் சேதுபதி அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இராமநாதபுரம் இளைய மன்னரும், இராமேஸ்வரம் கோயில் தக்காருமான இராஜா திரு. நாகேந்திர குமரன் சேதுபதி அவர்கள் 24–5–2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும். ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

திருக்கோயில் மற்றும் கல்வி நிறுவனப் பொறுப்புகளில் சிறப்பாக சேவையாற்றியவர் இராஜா திரு. நாகேந்திர குமரன் சேதுபதி அவர்கள்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ii) இந்திய விடுதலைப் போராளி அஞ்சலை பொன்னுசாமி அம்மாள் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்திய விடுதலைப் போராளி அஞ்சலை பொன்னுசாமி அம்மாள் அவர்கள் 31–5–2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

இந்தியாவை பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து மீட்டெடுக்க, 1943 ஆம் ஆண்டில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் 'இந்திய தேசிய இராணுவத்தில்' ஜான்சி ராணி படைப் பிரிவில் இணைந்து, கடும் நெருக்கடி மிகுந்த சூழல்களிலும் இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய வீரமங்கை அஞ்சலை பொன்னுசாமி அம்மாள் அவர்கள் தனது துணிச்சல், வீரம், மனவுறுதி, தியாகம் ஆகிய பண்புகளால் பெண்குலத்துக்கே பெருமை சேர்த்தவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.